பாதுகாவலில் உள்ள அல்லது பாதுகாப்புக்காக ஒப்படைக்கப்பட்ட பெண்ணை அரசாங்க அலுவலர் ஒருவர் கற்பழித்தல்; பிரிவு 302, அதாவது கொலைக் குற்றம்; மற்றும் பிரிவு 201, அதாவது சாட்சியங்களை அழித்தல் குற்றம் போன்ற பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, குற்றப் பிரிவு புலனாய்வுத் துறைக்கு Crime Branch CID,-க்கு மேல் விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளது. விரும்பத்தகாத இந்த சம்பவத்தில், சம்பந்தப்பட்டக் காவலர்கள் 5 பேரும் ஏற்கெனவே தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் 5 பேரும் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி வசந்தாவின் உடல் பிரேத பரிசோதனைக்குப் பின்பு அவரது கணவர் நடேசனிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டு விட்டது. Crime Branch CID, இந்த வழக்கின் மீதான விசாரணையை துரிதமாக மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தவறுகளோ, குற்றங்களோ எங்கே நடந்தாலும், அவை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும்போது நிச்சயமாக அதுபோன்ற தவறுகள் செய்பவர்கள், குற்றம் புரிபவர்கள் யாராக இருந்தாலும் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் மீது தக்க நடவடிக்கையை எடுப்பதிலும்; மீண்டும் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழா வண்ணம் தடுப்பதற்கான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதிலும் எங்கள் அரசு தயங்காது. இந்தச் சம்பவத்திலும் சட்ட விதி முறைகளுக்கு முரணாகச் செயல்பட்ட காவல் துறை அலுவலர்கள் மற்றும் காவலர்கள்மீது, இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் நேரடியாக வழங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. CB-CID விசாரணையை மேற்கொண்டுள்ளது. எனவே எங்கள் அரசு தவறு செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இன்றி நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

முற்பகல் 11.40

4. கவன ஈர்ப்பு.

(அ) பரம்பிக்குளம் -ஆளியாறு முதல் மண்டலம் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடாததால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் வி.பி. சந்திரசேகர் மற்றும் நா. சா. பழனிசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப்

பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி.பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம், ஆளியாறு முதல் மண்டலம் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடாததால் அதன் பாசனப் பகுதியில் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கடந்த 19-5-1993 அன்று பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட (தண்ணீர் வழங்கும் முறைபடுத்தும்) சட்டம் நிறைவேற்றப்பட்டது (தமிழ்நாடு சட்டம் 20/1993). மேற்படி சட்டத்தின்படி ஏற்கனவே நடைமுறையில் இருந்த 3 மண்டல பாசனத்திற்குப் பதில் நான்கு மண்டல பாசனமுறை அமுல்படுத்துவதன் மூலம் கூடுதலாக 1,75,000 ஏக்கர் பாசன வசதி பெற வகை செய்யப்பட்டது. இந்தச் சட்டத்தினை எதிர்த்து பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட ஒரிஜினல் ஆயக்கட்டுதாரர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அதனையடுத்து திரு. பங்காருசாமி என்பவரும் திரு. கே.என். பழனிசாமி அவர்களும் அதே போன்றதொரு வழக்கினை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்தனர்.

2. சென்னை உயர்நீதிமன்றம் 10-2-94 அன்று திருமூர்த்தி அணையிலிருந்து பாலாறு படுகையில் உள்ள நிலங்கள் பயன்பெறும் வகையில் பாசனமளிப்பது சம்பந்தமாக இடைக்கால தடை உத்திரவினை 24-2-94 வரை பிறப்பித்தது. அதன்பின்னர் 18-2-94 அன்று நீதிமன்றம் 10-2-94ல் பாசனத்திற்கு தண்ணீர் வழங்குவதில் என்ன நிலையிருந்ததோ அது அப்படியே இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. இந்த உத்தரவின்படி 10-2-94 அன்று பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் திருமூர்த்தி அணையிலிருந்து மூன்று மண்டல பாசன முறையிலோ அல்லது நான்கு மண்டல பாசன முறையிலோ தண்ணீர் விடப்படவில்லை. இந்நிலையில் நீர்த்தேக்கங்களில் போதிய நீர் இருப்பு உள்ளபடியால் அதனை உடனடியாக திறந்துவிடுவது குறித்து ஆணை வேண்டி தக்க சிறப்பு உறுதி ஆவணம் (Special Petition)

சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அது சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேலும் உயர்நீதிமன்றத்தில் இவ்வழக்கை விசாரிப்பதற்கு இரண்டு நீதிபதிகள் கொண்ட டிவிசன் பென்ச் ஒன்றை தலைமை நீதிபதி அவர்கள் அமைத்துள்ளார்கள். இந்நிலையில் இடைக்கால தடையாணையை ரத்து செய்து உயர்நீதிமன்றம் உத்தரவிடும்வரை பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் கீழ், திருமூர்த்தி அணையிலிருந்து உடனடியாக எந்த மண்டலத்தின் கீழும் தண்ணீர் திறந்துவிடுவது சாத்தியமில்லை.

திரு. வி.பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையைப் படித்தேன். இன்றைக்கு கோவை மாவட்டம் வறட்சியின் பிடியிலே சிக்கித் தவிக்கின்றது. புயல் ஏற்பட்ட காலத்திலேயும் கூட எங்களுடைய மாவட்டத்திலே மழை கிடையாது. இன்றைக்கு ஆயக்கட்டுதாரர்கள் பரம்பிகுளம், ஆளியாறு பாசனத்திலே புதிய 4 மண்டல முறைக்கு தடை வாங்கி இருக்கிறார்கள். ஆகவே, பழைய முறைப்படி 3 மண்டல முறைக்கு தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். இன்றைக்கு தென்னை மரம் என்பது மற்ற பயிர்களைப் போல அல்ல. தென்னை மரத்தை 40 ஆண்டுக்காலம், 50 ஆண்டுக்காலம், 60 ஆண்டுக்காலம் தண்ணீரை மட்டுமல்ல, கண்ணீரையையும் விட்டு வளர்க்கின்றார்கள், விவசாயிகள். அப்படிப்பட்ட நிலைமையிலே அங்கே இருக்கின்ற பயிர்கள் எல்லாம் வாடிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே 4 மண்டல முறைக்கு தடை வாங்கி இருக்கின்ற காரணத்தாலே, 3 மண்டல முறைக்கு தண்ணீர் விட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதோடு, அதற்குத் தண்ணீர் விடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத் தண்ணீர் வழங்கு முறைபடுத்து சட்டம் தமிழ்நாடு சட்டமன்றத்திலே 1993 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, அது சம்பந்தமாக உயர்நீதி மன்றத்திலே 10-2--1994 அன்று அந்தச் சட்டத்தின் மீது ஒரு தடையாணை பெற்று இருக்கிறார்கள். அதற்குப் பின் மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகள் 18-2-1994-லே ஏற்கெனவே இருந்த நடைமுறை " Status-quo to be maintained " என்ற உத்தரவையும் வழங்கி இருக்கிறார்கள். இந்த வழக்கு டிவிஷன் பெஞ்சுக்கு நம்முடைய உயர்நீதிமன்றத்திலே மாற்றப்பட்டு இருக்கிறது. அந்த வழக்கு விசாரணையை உடனடியாகத் துரிதப்படுத்த வேண்டும் என்றும், தண்ணீரை எந்த அடிப்படையிலே 3 மண்டலத்தின் அடிப்படையிலே திறக்கலாமா அல்லது 4

மண்டலத்தினுடைய அடிப்படையிலே திறக்கலாமா என்பதை உயர்நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டும் என்று அரசின் சார்பிலே வலுயுறுத்தப்பட்டு இருக்கிறது. அது சம்பந்தமான விசாரணையைத் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நம்முடைய அரசு வழக்கறிஞர் மூலமும் இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது. உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்த உடன் அது சம்பந்தமான முடிவினை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி.பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்திலே பேசுவதிலும் வாதாடுவதிலும் வல்லவர் என்பதை நான் அறிவேன். இரண்டு ஆணைகளும் என்னுடைய கையில் இருக்கின்றன. அந்த ஆணையை அவருக்குக் கொடுக்கிறேன். எந்த இடத்திலேயும் 3 மண்டலத்துக்குத் தண்ணீர் விடக் கூடாது என்று ஆணையிலே கிடையாது. ஆகவே, அப்படி இல்லாத நேரத்திலே 18-2-1994-லே கோர்ட் என்ன சொல்லி இருக்கிறது என்று சொன்னால், 10-2-1994-லே என்ன நிலைமைகள் இருந்தனவோ அவை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றுதான் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, 3 மண்டல முறைக்கு தண்ணீர் விட வேண்டாம் என்று சொல்லாத நிலையிலே அந்த 3 மண்டல முறைக்கு தண்ணீரைக் கொடுத்து வாடுகின்ற பயிரைக் காப்பாற்றுவதற்கு அமைச்சர் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாதத் திறமை இருந்தாலும், உண்மைகளை மறைக்க முடியாது. இருக்கின்ற நிலைமைகளைச் சொல்லித்தான் ஆகவேண்டும். ஆகவே, உயர்நீதிமன்றத்திலே, இந்த மூன்று மண்டலத்திலே தண்ணீர் விடலாமா அல்லது 4 மண்டலத்திலே தண்ணீர் விடலாமா என்பதிலே வழக்கு இருக்கின்ற காரணத்தினாலே, அதுவும் டிவிஷன் பெஞ்சுக்கு மாற்றப்பட்டு, அந்த வழக்கு விசாரணை இந்த மாத முடிவுக்குள்ளே, மார்ச் மாதத்திற்குள்ளே முடிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்காக உயர்நீதி மன்றத்திலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் 4,5 நாட்களுக்குள்ளே இந்த வழக்கு வர இருக்கிறது. அந்த உத்தரவு வந்துவிட்டால், தெளிவாக உத்தரவை பெற்று விட்டதற்கு பின்னால் அதிலே ஒரு நடவடிக்கை எடுக்க முடியும். அந்த வழக்கினுடைய தீர்ப்பின் அடிப்படையில் நம்முடைய உறுப்பினர் அவர்கள் பல

விவரங்களைத் தந்திருக்கிறார்கள். அதிலே நம்முடைய உயர்நீதிமன்றத்திலே சொல்லப்பட்ட தீர்ப்பில் பல்வேறு விளக்கங்கள் இருக்கின்றன. ஆகவே அதற்குள்ளே அரசு சொல்ல விரும்பவில்லை. ஆகவே அதற்கு ஒரு முடிவான தீர்ப்பு இந்த மாத இறுதிக்குள் வர இருக்கிறது. வேகமாக தண்ணீரைத் திறந்து விட வேண்டுமென்ற அக்கறை அரசுக்கு இருக்கிறது. ஆகவே இந்த மாத இறுதிக்குள்ளே அந்த வழக்கை முடிக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்திலே கேட்டிருக்கிறோம். அந்த முடிவு தெளிவாக வந்ததற்குப் பின்னாலே, உயர்நீதிமன்றம் என்ன உத்தரவைத் தருகிறதோ, அதைப்போல இந்த அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.45

(ஆ) பேராவூரணி மற்றும் பெருமகளூர் கால்நடை மருந்தகக் கட்டிடங்கள் பழுதடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பேராவூரணி மற்றும் பெருமகளூர் கால்நடை மருந்தகக் கட்டிடங்கள் உடைந்து விழக்கூடிய நிலையில் உள்ளது குறித்து' மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பேராவூரணி கால்நடை மருந்தகம்

பேராவூரணி கால்நடை மருந்தகம் 1964ம் வருடம் நெடுஞ்சாலைத் துறையினரால் கட்டப்பட்டது. அதன்பின் இந்தக் கட்டிடப் பழுதுகள் சில செப்பனிடப்பட்டன. 1993-ல் பலத்த மழையின் காரணமாக கட்டிடத்தின் மேல்தளம் மற்றும் தரை பாதிக்கப்பட்டு ஆங்காங்கு கசிவுகள் ஏற்பட்டு சேதமடைந்துள்ளது. இதைச் செப்பனிட ரூ. 5,000-க்கு மதிப்பீடு பெறப்பட்டு நிதி இசைவாணை கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநரால் 17-3-1994 அன்று வழங்கப்பட்டுள்ளது.